DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 110/ 2019
Deposition of PW 6/ LW10

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கணேசன் |
| Father's / Husband Name | : | சுடலைமுத்து |
| Village | : | இராஜதானி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | வட்ட காவல் ஆய்வாளர் |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.10.2025.

எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :</u>**

1.) நான் தற்போது இராஜதானி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சக்திவேல் காவல் ஆய்வாளர் பணி மாறுதலாகி சென்றுள்ளபடியால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) இவ்வழக்கில் சார்பு ஆய்வாளர் மணியன் நிலைய பொறுப்பில் இருந்தபோது , கடமலைக்குண்டு காவல் நிலைய குற்ற எண்.204/2017, பிரிவுகள் 294(b),452,352,506(2) IPC , 3(1) TNPPDL Act, 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து வைத்திருந்தார். பின்பு 30.08.2017 அன்று காவல் ஆய்வாளர் இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கின் புகார்தாரர் சந்திரலேகா என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சேதமடைந்த வீட்டினையும், பொருட்களையும் போட்டோ எடுத்த சண்முகம், முதற்கட்ட புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் மணியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3.) அன்றைய தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(b),452,352,506(2) IPC , 3(1) TNPPDL Act, 4 of TNPHW Act ல் இருந்து பிரிவுகள் 294(b),448,427,506(2),323 IPC மற்றும் 4 of TNPHW Act ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அனைத்து

விசாரணைகளையும் முடித்து எதிரி மீது மேற்கண்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த தேதி 03.04.2017 அன்று இரவு 11.45 என்றால் சரிதான். புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 04.05.2017. காலதாமதத்திற்கான சிறப்பு காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் வாதியால் தாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்பட்டவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரியின் மனைவி தான் புகார்தாரர் என்றால் சரிதான்.

2. அவர்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்துவந்தது என்ற விபரம் எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியும். விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மறுமணம் செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரியின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.06 18:12:37 +0530

Judicial Magistrate,
Andipatti.